**கிழக்கு மாகாண சபை – 2020 ஆம் ஆண்டு**

-----------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கிழக்கு மாகாண சபையின் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(1) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(2) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் உப பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பொழிப்பு அறிக்கை 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வழங்கப்பட்டதுடன் தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் உப பிரிவின் பிரகாரம் விபரமான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையானது 2021 திசெம்பர் 14 ஆந் திகதி வழங்கப்பட்டது. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரை மற்றும் தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுன்றத்திற்கும், அறிக்கையின் பிரதியானது 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின் பிரகாரம் மாகாண சபையில் முன்வைப்பதற்காக ஆளுநருக்கும் சமர்ப்பிக்கப்படுகின்றன.

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தை தவிர்த்து கிழக்கு மாகாண சபையின் நிதிக்கூற்றுக்களிலிருந்து 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கிழக்கு மாகாண சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதி செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமைகளை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

## (அ) பொருண்மையான கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் போது மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தினால் பெற்றுக் கொள்ளப்படாமலேயே ரூபா. 27.47 மில்லியன் பெறுமதியான உயிரியல் மருத்துவ உபகரணங்கள் நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட்டுள்ளன. ஆகையால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் உயிரியல் மருத்துவ உபகரணங்களின் பெறுமதி கூடுதலாகக் காட்டப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | 2021 ஆம் ஆண்டில் நிதிப் பிரமாணம் இல. 215(3)(இ) இன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்டவாறு பொது வைப்பு கணக்கிலிருந்து கொடுப்பனவு மேற்கொள்ளபபட்டிருந்தது. | கொள்வனவு செய்யப்பட்டிருக்காத உபகரணங்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருத்தலாகாது. |
| (ii) | ரூபா. 2.17 மில்லியன் மீண்டெழும் ஒதுக்கீடு முதலமைச்சு செயலகத்தின் முதலாவது தளத்தின் புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல் வேலைகளுக்கான மூலதனச் செலவினங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. ஆகையால் மீண்டெழும் செலவினம் அதே தொகையால் கூடுதலாகக் காட்டப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | முதலமைச்சினது மீண்டெழும் செலவினங்களுக்காக இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. | மீண்டெழும் ஒதுக்கீட்டை மீண்டெழும் செலவினங்களுக்கு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (iii) | ஐக்கிய நாடுகளின் சிறுவர் அவசர நிதியத்தினால் (UNICEF) வசதியளிக்கப்பட்ட ரூபா. 1.29 மில்லியன் மூலதன ஒதுக்கீடு மீளாய்வாண்டின் போது உத்தேசிக்கப்பட்ட பணிகளை | இத் தொகை பொது வைப்பு கணக்கிற்கு மாற்றப்பட்டு 2021 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்டிருந்தது. | மூலதனச் செலவினங்கள் ஏற்பட்ட பின்னர் நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுதல் வேண்டும். |

நிறைவேற்றாமலேயே கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் பொது வைப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்டு மூலதனச் செலவினமாகக் காட்டப்பட்டிருந்தது. ஆகையால், மூலதனச் செலவினம் அத் தொகையால் கூடுதலாகக் காட்டப்பட்டிருந்தது.

**(ஆ) கணக்கில் சரியான தன்மை மற்றும் இருக்கும் தன்மையை உறுதிப்படுத்துவதற்கான சான்றெதுவும் இல்லாமை**

---

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டுக்கான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா. 9,479.43 மில்லியன் கூட்டுமொத்த பெறுமதியான காணி மற்றும் காணி மேம்படுத்தல்கள், கட்டிடம் மற்றும் கட்டமைப்புக்கள் என்பனவற்றுக்கான உரித்துறுதிகள், நில அளவை வரைபடம், மதிப்பீட்டு அறிக்கைகள் என்பன கிடைக்கத்தக்கதாயிருக்காமையால் கணக்காய்வின் போது அவற்றைத் திருப்திகரமாக ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது. | அத்தகைய சான்றுகளை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய சான்றுகளை பெற்றுக்கொள் வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளக கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாகாண சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு மாகாண திறைசேரியினை உள்ளடக்கி அந்த நிறுவனங்களின் முகாமைத்துவத்தினால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் கிழக்கு மாகாண சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் தொடர்பான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால், மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் போன்ற காரணங்களினால் ஏற்படுகின்றது.

- வேண்டுமென்றே, விட்டுவிடுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்த்தல் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் மாகாண சபையின் உள்ளகக் கட்டுப்பாடு கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதிலும் உள்ளகக் கட்டுப்பாட்டின் விளைதிறன் தொடர்பான அபிப்பிராயத்தை வெளியிடுவதற்கு கருதவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக்கொள்கைகளின் பொருத்ததன்மை, கணக்கீடு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளை வெளிப்படுத்துதல்களின் பொருத்ததன்மை மதிப்பீடு செய்யப்பட்டன.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடங்கலாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்கள் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டதுடன் அதற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டன என்பது, மதிப்பீடுசெய்யப்பட்டது.

எனது கணக்காய்வின் மூலம் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு காண்புகள் பிரதான உள்ளக கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக முகாமைத்துவத்திற்கு தெரியப்படுத்தப்பட்டது.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.5.1 தலைப்பு – 902 – மாகாண பேரவைச் செயலகம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| **(அ) ஆண்டறிக்கையை சமர்ப்பித்தல்** | | |
| 2014 தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையான காலத்துக்கான ஆண்டறிக்கைகள் 2021 ஆகஸ்ட் 30 வரையிலும் கிழக்கு மாகாண சபையில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | மாகாண சபையானது 2017 செப்தெம்பர் 30 ஆம் திகதி கலைக்கப்பட்டது. எனவே, மாகாண சபை மறுசீரமைக்கப்பட்டதும் அவ் ஆண்டறிக்கைகள் சமர்ப்பிக்கப்படும். | வருடாந்தம் ஆண்டறிக்கையை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| **(ஆ) தீர்க்கப்படாத கணக்காய்வு பந்தி** | | |
| 2019 ஆம் ஆண்டுக்கான பொழிப்பு கணக்காய்வு அறிக்கையின் பந்தி 6.4(அ) இல் கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் அறிக்கையிடப்பட்டவாறு கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கு ரூபா. 4.6 மில்லியன் கூட்டுமொத்தமான கடன்கள் போதுமான பிணை பெறப்படாமல் வழங்கப்பட்டிருந்ததுடன் அவற்றுள் ரூபா. 1.10 மில்லியன் தொகை 10 ஆண்டுகளிற்கும் மேலாக நிலுவையாக விடப்பட்டிருந்தது. | இம் மாகாண சபையின் சட்டப் பிரிவு இந் நிலுவை கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு சட்ட நடவடிக்கை எடுத்துள்ளது. | கடன் நிலுவை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

### 1.5.2 தலைப்பு – 910 – முதலமைச்சரின் செயலகம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| **தீர்க்கப்படாத கணக்காய்வுப் பந்தி** | | |
| முதலமைச்சரின் முன்னாள் செயலாளருக்கு முற்பணமாக செலுத்தப்பட்டிருந்த ரூபா. 2 மில்லியனில் ரூபா. 1.12 மில்லியன் தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | கிழக்கு மாகாண பொதுக் கணக்குகள் குழுவானது 2016 திசெம்பர் 29 அன்று நிலுவையாக உள்ள முற்பணங்களை அறவீடு செய்யுமாறு பணித்தது. எனவே, இவ் விடயத்துக்கான நடவடிக்கை குறித்து பிரதம சட்ட உத்தியோகத்தரிடம் சமர்ப்பிக்கப்பட்டு செயன்முறையிலுள்ளது. | நிலுவையாக உள்ள முற்பணங்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

### 1.5.3 தலைப்பு – 911 – உள்ளூராட்சித் திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| **அதிகாரமளிக்கப்படாத கொடுக்கல் வாங்கல்கள்** | | |
| கோமரங்கடவல பிரதேச சபையினால் நியமிக்கப்பட்டு 2016 ஒக்தோபர் 01 தொடக்கம் 2020 மார்ச் 31 வரையான காலப்பகுதியில் ஈடுபடுத்தப்பட்டிருந்த 02 அமைய தொழிலாளர்களுக்கு கிழக்கு மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தினால் ரூபா. 1.43 மில்லியன் கூட்டுமொத்தமான சம்பளம் மற்றும் கூலிகள் மீள்நிரப்பு செய்யப்பட்டிருந்தன. | இது தவறுதலாக சம்பளத்துடன் மீள்நிரப்புச் செய்யப்பட்டிருந்தது. அத் தொகை இப் பிரதேச சபையிடமிருந்து அறவிடப்படும். | மீள்நிரப்புச் செய்யப்பட்ட சம்பளங்கள் மற்றும் கூலிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

### 1.5.4 தலைப்பு – 912 – கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| **வணிக முற்பணக் கணக்குகள்** | | |
| வணிக முற்பண நடவடிக்கைகளினுடைய ரூபா. 4 மில்லியன் வியாபார கடன்பட்டோர் மீதிகளினை 05 ஆண்டுகளாக அறவிடப்பட்டிருக்காது நிலுவைகளாக விடப்பட்டிருந்தன. | நிலுவைகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | காலதாமதமின்றி நிலுவைகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

### 1.5.5 தலைப்பு – 921 – பிரதிப் பிரதம செயலாளர் செயலகம் - நிதி

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| **(அ) வருமான முகாமைத்துவம்** | | |
| பதினான்கு மீண்டெழும் வருமானத் தலைப்புக்களின் கீழ் கூட்டுமொத்தம் ரூபா. 902 மில்லியன் வருமானம் மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது ரூபா. 331 மில்லியன் தொகை சேகரிக்கப்பட்டிருக்கவில்லை. | மத்திய அரசாங்கத்திடம் இருந்து எதிர்பார்க்கப்பட்ட வருமானம் கிடைத்திருக்கவில்லை. | வருடாந்தம் மதிப்பிடப்பட்ட வருமானத்தை சேகரிப்பதற்கு வருமானப் பட்டியல்களை உரிய காலத்தில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| **(ஆ) வருமானப் பங்கீடு (முத்திரை வரி)** | | |
| சேகரிக்கப்பட்ட முத்திரைக் கட்டணம் கூட்டுமொத்தம் ரூபா. 349 மில்லியன் 02 ஆண்டுகளிற்கு மேலாக உள்ளூராட்சி அதிகாரசபைகளிற்கு அனுப்பப்படாமல் நிலுவையாக விடப்பட்டிருந்தது. | முத்திரைக் கட்டணம் மாகாண சபை நிதியக் கணக்கிற்கு மாற்றப்படும். | முத்திரைக் கட்டணத்தை உரிய காலத்தில் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

**(இ) ஏனைய முற்பணக் கணக்குகள்**

| | | |
|---|---|---|
| 2004 ஒக்தோபர் 11 ஆம் திகதிய 118 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் கிழக்கு மாகாண சபையின் 07 திணைக்களங்கள் தொடர்பான ரூபா. 32.6 மில்லியன் தொகையான அரசாங்க உத்தியோகத்தர்களிற்கான முற்பணக் கணக்கு நிலுவைகள் 05 ஆண்டுகளிற்கு மேலாக தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவையாக விடப்பட்டுள்ள மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

**(ஈ) தீர்க்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்**

| | | |
|---|---|---|
| (i) முத்திரைக் கட்டணமாக குறைந்த தொகையை செலுத்துவதற்காக காணி உரிமையாளர்கள் அவர்களது காணிகளுக்கு குறைவான பெறுமதியை வெளிப்படுத்தியிருந்தார்கள். எனவே, கூட்டுமொத்தம் ரூபா. 5.25 மில்லியன் தண்டப் பணத்துடன் மேலதிக முத்திரைக் கட்டணமானது 188 சந்தர்ப்பங்களில் அக் குறைத்து மதிப்பிடப்பட்ட சொத்துக்களுக்கு விதிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2019 ஆம் ஆண்டிற்கான பொழிப்பு கணக்காய்வு அறிக்கையின் பந்தி 2.2(இ) இல் கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் அறிக்கையிடப்பட்டவாறு நிலுவைகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கைகள் செயன்முறையிலுள்ளன எனவே, ரூபா. 5.25 மில்லியன் மீதி சேகரிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முத்திரைக் கட்டண நிலுவையை தண்டப்பணத்துடன் சேர்த்து சேகரிக்கப்படுவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ii) 2012 தொடக்கம் 2018 வரையான காலப்பகுதியில் கிழக்கு மாகாணத்தில் பதிவு செய்யப்பட்ட ஆறாயிரத்து இருபத்து ஆறு (6,026) உரித்துறுதிகள் 2019 ஆம் ஆண்டுக்கான பொழிப்பு கணக்காய்வு அறிக்கையின் பந்தி 2.3(ஆ) இல் கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் அறிக்கையிடப்பட்டவாறு காணிகளின் குறைந்த மதிப்பீட்டின் காரணமாக மேலதிக முத்திரைத் தீர்வையை சரிபார்த்து விதிக்கும் பொருட்டு மாகாண சபையின் வருமானப் பிரிவினால் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீடுகள் துரிதப்படுத்தப்படும். | பதிவு செய்யப்பட்ட காணியின் நியாயமான பெறுமதியை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

**(உ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

---------------------------------------------------------------

| | | |
|---|---|---|
| பிடிபணம், குறித்துரைக்கப்பட்ட வைப்புக்கள் போன்ற கூட்டுமொத்தம் ரூபா. 9.7 மில்லியன் பெறுமதியான பொது வைப்புக்கள் 09 மாதங்கள் தொடக்கம் 02 ஆண்டுகள் வரையிலான காலப்பகுதி வீச்செல்லையில் இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி பிரமாணங்களின் நி.பி. 571(3) இன் பிரகாரம் சாத்தியமானளவு விரைவாக முறையான கணக்கிற்கு அல்லது வருமானத்திற்கு செலவு வைக்கப்படாமல் அல்லது மீளளிக்கப்படாமல் பொது வைப்புக் கணக்குகளில் நிறுத்தி வைப்பதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தன. | நிதிப் பிரமாண இல. 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | வைப்புக்களை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**(ஊ) நிதி மீளாய்வு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| **(i) நிதி விளைவுகள்/ செயலாற்றல்** | | |
| சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான மாகாண சபையின் செயற்பாடுகள் தொடர்பான நிதி விளைவு ரூபா. 1,724 மில்லியன் மிகையாகக் காணப்பட்டதுடன் ஒப்பிடும் போது நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா. 1,153 மில்லியனாகக் காணப்பட்டமையானது நிதி விளைவுகளில் ரூபா. 571 மில்லியன் அதிகரிப்பொன்றை காட்டியது. மீளாய்வாண்டிற்கான தொகுதிக்கொடை ரூபா. 5,347 மில்லியனால் அதிகரிக்கப்பட்டமையானது இவ் அதிகரிப்பிற்கு பிரதானமாக பங்களித்திருந்தது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | வருமானத்தை அதிகரிப்பதற்கு பல்வேறு மாகாண வருமான மூலங்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

**(ii) வருமான செலவின முரண்கள்**

| ஆண்டு | 2020 | 2019 | முரண் |
| --- | --- | --- | --- |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| வருமானம் | 31,225 | 27,529 | 3,696 |
| செலவினம் | 29,501 | 26,376 | 3,125 |
| மிகை | 1,724 | 1,153 | 571 |

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| தொகுதிக் கொடை ரூபா. 5,347 மில்லியன் அல்லது 25 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டிருந்த அதேவேளை கூலிகள், சம்பளங்கள் மற்றும் ஏனைய வேலைவாய்ப்பு நலன்கள் நேர் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா. 2,476 மில்லியன் அல்லது 12 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டிருந்தன. ஆகையால் மிகையானது முன்னைய ஆண்டின் தொடர்புடைய தொகையுடன் ஒப்பிடும் போது ரூபா. 571 மில்லியன் அல்லது 49 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | மாகாண வருமானத்தை அதிகரிப்பதற்கும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரிற்கு செலுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

## 1.5.6 தலைப்பு – 922 – பிரதிப் பிரதம செயலாளர் செயலகம் - திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| **(அ) மாகாண அபிவிருத்தி திட்டம்** | | |
| மீளாய்வாண்டிற்கான மாகாண அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், ரூபா. 2,924.24 மில்லியன் பெறுமதியான 790 முன்மொழிவுகள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் ரூபா. 900 மில்லியன் மொத்த பெறுமதியில் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த புதிய பணிகள் மற்றும் தொடர் பணிகளுக்கான 93 முன்மொழிவுகள் மீளாய்வாண்டின் போது கட்டுநிதி போதாமை மற்றும் கொவிட்-19 தொற்றுநோய் சிக்கல் நிலைமை காரணமாக நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | நிதியேற்பாடுகளின் போதாமை மற்றும் கொவிட்-19 நிலைமை என்பன வளங்களைத் திரட்டுவதற்கு கடினமான சூழலை உருவாக்கியிருந்தன. | திருத்தப்பட்ட செயற்பாட்டுத் திட்டத்தின் பிரகாரம் குறுக்கிடப்பட்ட பணிகளை அமுல்படுத்துவதற்கும், பணி முன்மொழிவுகளை பூர்த்தி செய்வதற்கும் முன்னுரிமை நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

**(ஆ) தாமதமான செயற்திட்டம்**

| | | |
|---|---|---|
| கிழக்கு மாகாண திட்டமிடல் செயலகத்தினால் நான்கு மாடி அலுவலகக் கட்டிடங்களின் நிர்மாணப் பணிகள் ஒப்பந்ததாரர் ஒருவருக்கு 2018 செப்தெம்பர் 04 இல் அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்யப்படுவதற்கு ரூபா. 194.5 மில்லியன் இணங்கப்பட்ட ஒப்பந்த விலையில் வழங்கப்பட்ட போதிலும் கடந்த 03 ஆண்டுகளின் போது ஏழு தடவைகள் பணிகளின் காலநீடிப்புடன் 2021 யூன் 29 வரை ரூபா. 152.91 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. ஆனால், 2021 நவம்பர் 15 வரையிலும் பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | பிரதானமாக தவிர்க்க முடியாத சூழ்நிலைகள் இப்பணியை பூர்த்தி செய்வதில் கால தாமதத்தை ஏற்படுத்தியிருந்தன. | இறுக்கமான நிர்மாண கண்காணிப்பு முறைமை நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டும். |

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| | | |
|---|---|---|
| கிழக்கு மாகாண சபையின் திட்டமிடல் செயலகம் கிழக்கு மாகாணத்தின் நிலைபேறான சமநிலை அபிவிருத்திக்கான மையமொன்றின் தூரநோக்குடன் ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும், கிழக்கு மாகாண சபையின் செயலகங்கள், அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் உட்பட நாற்பது நிறுவனங்களால் 2017 இன் 19 ஆம் இலக்கமிடப்பட்ட நிலைபேறான அபிவிருத்திச் சட்டத்தின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள், அடைந்துகொள்ளப்பட்ட இலக்கு, அடைதல்களின் முன்னேற்றம் தொடர்பான காலரீதியான மீளாய்வு என்பன 03 ஆண்டுகளிற்கும் மேலாக மேற்கொள்ளப்பட்டிருக்காமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது. | அனைத்து மாகாண முகவர்களும் 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயலாற்றல் அறிக்கையை அவற்றின் துறை இலக்குகளின் அடிப்படையில் ஏற்கனவே அறிக்கையிட்டுள்ளன. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

### 1.5.7 தலைப்பு – 923 – பிரதிப் பிரதம செயலாளர் செயலகம் - நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **பதவியணியினர் நிர்வாகம் தொடர்பான அவதானிப்புக்கள்**<br><br>இலங்கை பொறியியல் சேவையின் 09 உத்தியோகத்தர்கள் 06 தொடக்கம் 13 ஆண்டுகள் வரையான காலவீச்சில் குறிப்பிட்ட பணிநிலையமொன்றில் பணியாற்றியிருந்தனர். எவ்வாறாயினும், மாகாண சபையில் பணியாற்றிய இலங்கை பொறியியல் சேவையில் உள்ள உத்தியோகத்தர்களின் இடமாற்றக் கொள்கையானது 05 வருடங்களுக்கு மேலாக உருவாக்கப்பட்டிருக்கவில்லை. | கட்டிடத் திணைக்களத்தை சேர்ந்த பொறியியலாளர்கள் கல்வித் திணைக்களம் மற்றும் உள்ளூராட்சித் திணைக்களத்திற்கு அவர்களின் குறித்துரைக்கப்பட்ட அனுபவத்திற்கேற்ப இட மாற்றப்பட்டுள்ளனர். | வருடாந்த இடமாற்றக் கொள்கையை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

### 1.5.8 தலைப்பு – 924 – பிரதிப் பிரதம செயலாளர் செயலகம் - பொறியியல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| **(அ) சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**<br><br>துப்பரவாக்கல் சேவைகள் மற்றும் பாதுகாப்பு சேவைகள் போன்றவற்றுக்கான ஒப்பந்த சேவைகளின் ஊழியர்களுக்கான ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கான பங்களிப்பு ஒப்பந்ததாரரால் பங்களிப்புச் செய்யப்பட வேண்டிய போதிலும் கிழக்கு மாகாண சபையினால் பங்களிப்புகளுக்காக தொழில்தருநரின் | தற்போது உரிய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் ஊ.சே.நி மற்றும் ஊ.ந.நி பங்களிப்பு தொடர்பாக தேவையான ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | ஊ.சே.நி/ ஊ.ந.நி பங்களிப்பிற்கான பதிவு விபரங்களை சரிபார்க்கப்பட்டு செலுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| பதிவு விபரம் சரிபார்க்கப்படாமல் ஒப்பந்ததாரருக்கு 2020 மே 01 தொடக்கம் 2020 திசெம்பர் 31 வரையிலான காலப்பகுதிக்காக ரூபா. 9.04 மில்லியன் தொகை செலுத்தப்பட்டுள்ளது. | | |
| **(ஆ) பராமரிப்பு மற்றும் திருத்தங்களை மேற்கொள்ளத் தவறியமை** | | |
| கிழக்கு மாகாண சபைக்கு சொந்தமான 340 பழுதடைந்த வாகனங்கள் 01 ஆண்டிற்கு மேலாக உரிய முறையில் பராமரிக்கப்படாமலும் திருத்தம் செய்யப்படாமலும் பல்வேறு திணைக்களங்களின் பல்வேறு வாகன தரிப்பிடங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. | திணைக்களத் தலைவர்கள், இயந்திரப் பொறியியலாளர் பரிந்துரையுடன் தமது வாகனத்தை திருத்தம் செய்வதற்கான ஆரம்ப நடவடிக்கையை எடுத்தல் வேண்டும். | வாகனங்களை திருத்தம் செய்து செயற்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| **(இ) விளைவற்ற/ குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்** | | |
| கிழக்கு மாகாணத்தில் தொழில்நுட்பக் கல்வி நோக்கங்களிற்காக 32 பாடசாலைகளால் பயன்படுத்த முடியாத மற்றும் பழுதடைந்த 25 வாகனங்கள் கோரப்பட்டிருந்த போதிலும் அவ்வாறான வாகனங்கள் பல்வேறு வாகனத் தரிப்பிடங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. | வாகனங்களை பெற்றுக்கொள்ளுமாறு அனைத்து கல்வி வலயங்களுக்கும் தொலைபேசியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. | மாணவர்களுக்கான தொழில்நுட்பக் கல்வியின் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக இவ் வாகனங்களை கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

### 1.5.9 தலைப்பு – 926 – மாகாண உள்ளகக் கணக்காய்வு திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணங்காமைகள்** | | |
| ஒவ்வொரு நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம், பாதீட்டு மதிப்பீடு, பெறுகைத் திட்டம், பாதீட்டு முன்மொழிவுகள் மற்றும் ஏனைய அபிவிருத்தி செயற்திட்டங்கள் என்பவற்றில் விசேட கவனம் செலுத்தி வருடாந்த உள்ளக கணக்காய்வுத் திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டும். மேலும், நிறுவனங்களில் செயற்திறன்மிக்க செயலாற்றலை உறுதிப்படுத்துவதற்கு செயலாற்றல் கணக்காய்வு, முறைமைக் கணக்காய்வு, நிதிக் கணக்காய்வு மற்றும் நிறுவனங்களின் அதிக ஆபத்துள்ள செயற்பாடுகளின் கணக்காய்வை மையமாகக் கொண்ட விசேட புலனாய்வுகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக இது இருக்க வேண்டும். எவ்வாறாயினும், 2019 சனவரி 12 ஆம் திகதிய டிஎம்ஏ/01-2019 ஆம் இலக்கமிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் பிரகாரம் செயலாற்றல் கணக்காய்வு 02 ஆண்டுகளுக்கும் மேலாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் கவனம் செலுத்துவதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | மாகாண சபையின் செயற்பாடுகள் தொடர்பாக செயலாற்றல் கணக்காய்வை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

## 1.5.10 தலைப்பு – 932 – கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **கைவிடப்பட்ட செயற்திட்டம்**<br>2019 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்திக்கொடை நிதியிலிருந்து ரூபா. 5.4 மில்லியன் மொத்தக் கிரயத்தில் மூன்று செயற்திட்டங்கள் மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் 02 ஆண்டுகளிற்கு மேலாக இச் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்படாமல் கைவிடப்பட்டிருந்தன. | கட்டுநிதி போதாததன் காரணமாக செயற்திட்டங்களை முழுமையாக அமுல்ப்படுத்த முடியவில்லை. | அங்கீகரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயற்திட்டங்கள் தொடங்கப்பட்டு சரியான நேரத்தில் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும். |

## 1.5.11 தலைப்பு – 934 – நீர்ப்பாசன திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **ஒப்பந்த நிர்வாகக் குறைபாடுகள்**<br>பொத்துவிலில் உள்ள கிழக்கு மாகாண நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகத்திற்கான ரூபா. 21.8 மில்லியன் மொத்தக் கிரய மதிப்பீட்டிலான மூன்று மாடிக் கட்டிடங்களின் நிர்மாணப் பணிகள் 2010 இல் ஆரம்பிக்கப்பட்டு வேலைகளுக்காக ரூபா. 4 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் 10 ஆண்டுகளிற்கு மேலாக மிகுதிப் பணிகள் நிறைவேற்றப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கட்டிடத்தின் தரை தளத்தை மாத்திரம் நிர்மாணிப்பதற்கு வரைபடங்கள் மற்றும் மதிப்பீடுகளுடன் கூடிய ரூபா 9.40 மில்லியன் தொகையான முன்மொழிவொன்று 2021 ஆம் ஆண்டிற்கான சீபிஜி ஒதுக்கீட்டின் கீழ் இந்த முன்மொழிவை உள்ளடக்குவதற்கு விவசாய அமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது, இதுவரை பதிலெதுவும் கிடைத்திருக்கவில்லை. | மிகுதிப் பணிகளை விரைவாக தொடங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

## 1.5.12 தலைப்பு – 941 – கல்வி திணைக்களம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| **(அ)** | **ஆசிரியர்களின் மிகைகள் மற்றும் பற்றாக்குறை மற்றும் இணைப்புக்கள் தொடர்பான கல்விக்குரிய அவதானிப்புக்கள்** | | |
| (i) | இலங்கை அதிபர் சேவையிலிருந்து அதிபர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் ஐந்து வருடங்களாக 250 பாடசாலைகளுக்கு 250 செயலாற்றும் (performing) அதிபர்கள் நியமனம் செய்யப்பட்டிருந்தனர். | அதிபர்களின் ஆட்சேர்ப்பின் பின்னர் இத் தற்காலிக ஏற்பாடு விரைவில் மீளப் பெறப்படும். | காலதாமதமின்றி அதிபர்களை நியமனம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ii) | பதினான்கு கல்வி வலயங்களில் உள்ள பாடசாலைகளில் 04 சதவீதம் தொடக்கம் 63 சதவீதம் வரையிலான வீச்செல்லையில் 293 அதிபர்களின் பதவிகள் வெற்றிடமாக காணப்பட்ட அதேவேளை அம்பாறை மாவட்டத்தின் ஏனைய மூன்று கல்வி வலயங்களின் பாடசாலைகளில் 33 அதிபர்கள் மேலதிகமாகக் காணப்பட்டனர். | அதிபர்கள் பற்றாக்குறையாக உள்ள பாடசாலைகளிற்கு மேலதிக பதவியணியினரை இடமாற்றம் செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அதிபர் பற்றாக்குறையாக உள்ள பாடசாலைகளுக்கு அதிபர்களை நியமனம் செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (iii) | பதினொரு கல்வி வலயங்களின் பாடசாலைகளில் 05 சதவீதம் தொடக்கம் 23 சதவீதம் வரையிலான வீச்செல்லையில் 1,262 ஆசிரியர்களின் பதவிகள் வெற்றிடமாக காணப்பட்ட அதேவேளை ஏனைய ஆறு கல்வி வலயங்களின் பாடசாலைகளில் 1,063 ஆசிரியர்கள் மேலதிகமாகக் காணப்பட்டனர். | ஆசிரியர்கள் பற்றாக்குறையாக உள்ள பாடசாலைகளுக்கு மேலதிக பதவியணியினரை இடமாற்றம் செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஆசிரியர்கள் பற்றாக்குறையாக உள்ள பாடசாலைகளுக்கு ஆசிரியர்களை நியமனம் செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

## 1.5.13 தலைப்பு – 950 – சுகாதார அமைச்சு

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை** | | |
| 2016 ஆகஸ்ட் 26 இன் 04/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை மூலம் திருத்தப்பட்ட தாபன விதிக்கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 5:4:1 ஆம் உப பிரிவின் பிரகாரம் 01 ஆண்டிற்கு மேலாக கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் அமைச்சின் 08 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா. 1.47 மில்லியன் கூட்டுத்தொகையான பதவியணியினர் அட்டவணைப்படுத்தப்பட்ட விடுதிகளுக்கான வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | அனைத்து விடுதிகளுக்குமான வாடகை மதிப்பீடுகள் தற்போது விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | தாபன விதிக்கோவையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் விடுதி வாடகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

## 1.5.14 தலைப்பு – 951 – சுகாதார சேவைகள் திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| **(அ) செயற்பாட்டு வினைத்திறனின்மைகள்** | | |
| டிஜிட்டல் சுகாதார செயற்திட்டத்தின் கீழ் இலத்திரனியல் மருத்துவ அறிக்கை முறைமையை அறிமுகப்படுத்துமுகமாக அரசாங்க சுகாதார பராமரிப்பு சேவைகளின் தரம் மற்றும் வினைத்திறனை மேம்படுத்துவதற்கு தொண்ணூறு மடிக்கணனிகள், ஏனைய | ஒதுக்கப்பட்ட நிதியை பயன்படுத்தி செயற்திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சொத்துக்களை செயற்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் அந்த உபகரணங்கள் தெஹியத்தகண்டி, காத்தான்குடி, வாழைச்சேனை மற்றும் ஏறாவூரில் அமைக்கப்பட்டிருந்த நான்கு ஆதார வைத்தியசாலைகளிலும் வாகரை பிரதேச வைத்தியசாலையிலும் 01 தொடக்கம் 03 ஆண்டுகள் வரையான காலப்பகுதியில் இந்த முறைமையை அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் தேக்கி வைக்கப்பட்டிருந்தன.

**(ஆ) வரித் தேவைப்பாடுகளுடன் இணங்காமைகள்**

---

| | | | |
|---|---|---|---|
| (i) | கூட்டுமொத்தம் ரூபா. 5.55 மில்லியன் பெறுமதி சேர் வரி (வற்) 08 சதவீதத்தில் செலுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் கூட்டுமொத்தம் ரூபா. 10.42 மில்லியன் 15 சதவீதத்தில் கணிக்கப்பட்டு கிழக்கு மாகாணத்திலுள்ள மூன்று பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைகளால் செலுத்தப்பட்டிருந்தது. இதன் விளைவாக, 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டத்தின் பிரிவு 2(அ) பிரிவில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் மற்றும் 2019 நவம்பர் 29 ஆம் திகதிய 2151/52 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2005 இன் 06 ஆம் இலக்க சட்டம் என்பவற்றிற்கு முரணாக 2019 திசெம்பர் 01 தொடக்கம் 2020 திசெம்பர் 31 வரையிலான காலப்பகுதியின் போது ஒப்பந்ததாரர்களுக்கு ரூபா. 4.87 மில்லியன் தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டுள்ளது. | கட்டுநிதி போதாததன் காரணமாக மேற்படி கொடுப்பனவு உரிய காலத்தில் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் பின்னர் 5 சதவீத விலைவிகிதத்தில் செலுத்தப்பட்டது. | மேலதிகமாகச் செலுத்தப்பட்ட இப் பெறுமதி சேர் வரியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 2016 தொடக்கம் 2020 வரையிலான காலப்பகுதியின் போது 03 பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைகளால் கூட்டுமொத்தம் ரூபா. 2.94 மில்லியன் பெறுமதியான தேசத்தை கட்டியெழுப்பும் வரி 2009 இன் 09 ஆம் இலக்க தேசத்தைக் கட்டியெழுப்பும் வரிச் சட்டத்தின் பிரகாரம் உள்நாட்டு வருமான வரித் திணைக்களத்திற்கு அனுப்பப்படாமல் வழங்குநர்களிற்கு செலுத்தப்பட்டிருந்தது. | வழங்குநர்களிடமிருந்து செலுத்தப்பட்ட முழுத் தொகையையும் அறவீடு செய்யுமாறு சம்பந்தப்பட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைகளிற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | அதனை அறவீடு செய்து உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

## 1.5.15 தலைப்பு – 961 – வீதி அபிவிருத்தி திணைக்களம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| **(அ)** | **வணிக முற்பணக் கணக்குகள்** | | |
| (i) | வணிக முற்பண நடவடிக்கைகளுடன் தொடர்புபட்ட ரூபா. 1.4 மில்லியன் தொகையான இயந்திர வாடகை கட்டண நிலுவைகள் 10 ஆண்டுகளுக்கும் மேலாக சேகரிக்கப்பட்டிருக்கவில்லை. | இந் நிலுவைகளை சேகரிப்பதற்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | சேகரிப்பு செயன்முறையை விரைவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ii) | இயந்திரப் பிரிவின் வணிகச் செயற்பாடுகள் தொடர்பில் இலாபம் சார்ந்த பொறிமுறை நிறுவப்பட்டிருக்காமையால் 03 ஆண்டுகளிற்கு மேலாக ரூபா. 3 மில்லியன் தொடக்கம் ரூபா. 5 மில்லியன் வரையான வீச்சில் நட்டத்தை ஏற்படுத்தியிருந்தன. | இதனை இலாபம் ஈட்டக்கூடியவாறு செயற்திறனாக்கப்படுவதற்கு முறையான பொறிமுறையை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இயந்திரப் பிரிவின் செயற்பாடுகள் தொடர்பாக செயற்திறனான மீளாய்வொன்றை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| **(ஆ) பராமரிப்பு மற்றும் திருத்தங்களை மேற்கொள்ளத் தவறியமை**<br>-------------------------------------------------------- | | |
| இயந்திரப் பிரிவின் வணிக முற்பண நடவடிக்கைகளுக்காக கொள்வனவு செய்யப்பட்ட 30 இயந்திரப் பொருட்கள் 02 தொடக்கம் 10 ஆண்டுகள் வரையான வீச்சில் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் விளைவற்றிருந்தன. | இயந்திரங்களை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இயந்திரங்களை திருத்தம் செய்து பயனுறுதியான வகையில் உபயோகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| **(இ) விளைவற்ற/ குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்**<br>-------------------------------------------------------- | | |
| 2013 ஆம் ஆண்டில் JICA செயற்திட்டத்தினால் அன்பளிப்பு செய்யப்பட்டிருந்த எட்டு மண் பரிசோதனை உபகரணங்கள் முறையே அம்பாறைப் பகுதிக்கான கிழக்கு மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பரிசோதனை ஆய்வுகூடத்திற்கும் மட்டக்களப்பில் உள்ள கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் பிரதம பொறியியலாளர் அலுவலகத்திற்கும் வழங்கப்பட்டிருந்தன. அவை ஆண்டுகளாக குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படாமல் விளைவற்றிருந்தன. | எதிர்காலத்தில் இந்த பரிசோதனை உபகரணங்களைப் பயன்மிக்கதாக உபயோகிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | நன்கொடையாக வழங்கப்படும் பொருட்களை மண் பரிசோதனை நோக்கத்திற்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

### 1.5.16 தலைப்பு – 962 – காணி நிர்வாக திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **தீர்க்கப்படாத கணக்காய்வு பந்தி**<br>கிழக்கு மாகாணத்திலுள்ள ஒன்பது பிரதேச செயலகங்களினால் குத்தகைக்கு விடப்பட்ட அரசாங்க காணிகள் தொடர்பாக ரூபா. 328.89 மில்லியன் கூட்டுமொத்தத் தொகையான குத்தகை வாடகையானது 2019 ஆம் ஆண்டிற்கான பொழிப்பு கணக்காய்வு அறிக்கையின் பந்தி 2.4(ஆ) இல் கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் அறிக்கையிடப்பட்டவாறு கிழக்கு மாகாண சபையின் காணி நிர்வாகத் திணைக்களத்தினால் அறவிடப்பட்டிருக்காது 01 தொடக்கம் 04 ஆண்டுகள் வரையான காலப்பகுதியில் நிலுவைகளாக விடப்பட்டிருந்தன. | கூட்டுமொத்தம் ரூபா. 328.89 மில்லியன் பெறுமதியான இக் குத்தகை வாடகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | குத்தகை வாடகை நிலுவைகளைச் சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

### 1.5.17 நியதிச்சட்டக் கணக்குகள்

#### (அ) வீடமைப்பு அதிகாரசபை

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **பதவியணியினர் நிர்வாகம் தொடர்பான அவதானிப்புக்கள்**<br>கிழக்கு மாகாண சபையால் நிறைவேற்றப்பட்டிருந்த நியதிச்சட்டத்தின் சட்டத்தின் பிரகாரம் ஸ்தாபிக்கப்பட்ட இரண்டு நியதிச்சட்ட நிறுவனங்களிற்கு மீளாய்வாண்டின் போது கிழக்கு மாகாண சபையின் வீடமைப்பு அதிகாரசபையினால் 21 பதவியணியினரிற்கான ஆளணி வேதனங்களிற்காக ரூபா. 7 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 04 தொடக்கம் 07 ஆண்டுகள் வரையான காலப்பகுதி வீச்சில் ஆட்சேர்ப்புத் திட்டமோ அல்லது பதவியணியினரோ அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அங்கீகரிப்பதற்கான கோரிக்கை பல தடவைகள் அனுப்பப்பட்ட போதிலும் நிராகரிக்கப்பட்டிருந்தது. | பதவியணி மற்றும் ஆட்சேர்ப்பு திட்டத்தை அங்கீகரிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

## (ஆ) வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| **வருமான முகாமைத்துவம்**<br>ரூபா. 29.75 மில்லியன் தொகையான பாதை அனுமதிப்பத்திரத்திலிருந்தான வருமானம் மீளாய்வாண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்றில் மீண்டெழும் வருமானத்திற்கு பதிலாக நிதி நிலைமைக் கூற்றில் மூலதனமாகக் காட்டப்பட்டிருந்தது. | இது மீளாய்வாண்டுக்கான வருமான செலவினக் கூற்றில் மீண்டெழும் வருமானமாக குறிப்பிடப்பட்டுள்ளது. | பாதை அனுமதிப்பத்திரத்திலிருந்தான வருமானம் மீண்டெழும் வருமானமாகக் காட்டப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

## (இ) சுற்றுலாப் பணியகம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| **பதவியணி நிர்வாகம் தொடர்பான அவதானிப்புக்கள்**<br>கிழக்கு மாகாணசபையால் நிறைவேற்றப்பட்டிருந்த நியதிச்சட்டத்தின் பிரகாரம் ஸ்தாபிக்கப்பட்ட இரண்டு நியதிச்சட்ட நிறுவனங்களிற்கு மீளாய்வாண்டின் போது கிழக்கு மாகாண சபையின் சுற்றுலாப் பணியகத்தினால் 13 பதவியணியினரிற்கான ஆளணி வேதனங்களிற்காக ரூபா. 4 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 04 தொடக்கம் 07 ஆண்டுகள் வரையான காலப்பகுதி வீச்சில் ஆட்சேர்ப்புத் திட்டமோ அல்லது பதவியணியினரோ அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அங்கீகரிப்பதற்கான கோரிக்கை பல தடவைகள் அனுப்பப்பட்ட போதிலும் நிராகரிக்கப்பட்டிருந்தது. | பதவியணி மற்றும் ஆட்சேர்ப்பு திட்டத்தை அங்கீகரிப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |